


- வாழ்வோம்

`பூந்தமல்லி - வடபழனி வரையிலான சென்னை மெட்ரோ ரயில் போக்குவரத்து நடைமுறைக்கு வந்துள்ள நிலையில், அதன் வரலாற்றில் இருந்து தி.மு.க.வின் பெயரை மறைத்துவிட முடியாது' எனப் பதிவிட்டுள்ளார், விவேகானந்தன் ராமதாஸ் என்பவர்.

அவருடைய பதிவில், `சென்னை மெட்ரோ PHASE- 2 வில், ஒன்றிய அரசின் CONTRIBUTION என்பது வெறும் 11.7% தான். 35.2% தமிழ்நாடு அரசினுடையது. 53.1% சர்வதேச நிதி நிறுவனங்களிடம் கடனாகப் பெறுவது. இந்தக் கடனை வாங்கித் தருவதற்கு கேரண்டி கையெழுத்துப் போடுவது மட்டுமே ஒன்றிய அரசு, கேரண்டி கையெழுத்துப் போடுவதற்கும் ஒரு பெரிய மனசு வேணும்பா'னு `வெற்றிக்கொடி கட்டு' படத்தில் வடிவேலுவைப் பார்த்துச் சொல்வார்கள் இல்லையா, அந்தப் பெரிய மனசுடன் ஒன்றிய அரசு 53% கடன் தொகையைத் தன் கணக்கில் சேர்த்துக்கொண்டு, 65% தொகையை ஒன்றிய அரசே தருவதாகப் பொய்ப் பிரச்சாரம் செய்கிறது.

தி.மு.க.வின் பெயரை மறைக்க முடியாது!

ஆனால், அந்தக் கடனைத் திருப்பிக் கட்டப்போவது, சி.எம்.ஆர்.எல். (CMRL) நிறுவனம். சி.எம்.ஆர்.எல் (CMRL) -ஆல் கட்ட முடியவில்லையென்றால், தமிழ்நாடு அரசுதான் கடனை ஏற்க வேண்டும் என்பதே நிபந்தனை. ஆரம்பத்திலிருந்து ஒன்றிய அரசு, தான் தரும் 11% ஐ தரவும் முடியாது, கடனும் வாங்கித் தர முடியாது என்று கிட்டத்தட்ட 5 ஆண்டுகள் இழுத்தடித்தது. 2016-இல் அறிவிக்கப்பட்ட இந்தத் திட்டத்திற்கு, 2024 அக்டோபர் மாதத்தில்தான் நிதி தருவதற்கு ஒன்றிய அரசு சம்மதித்தது. 2021-இல் ஆட்சிக்கு வந்த தி.மு.க. அரசு, ஒன்றிய அரசு நிதி தராவிட்டாலும் இந்தத் திட்டம் தாமதமாகக் கூடாது என்பதற்காக, மாநில அரசின் சொந்த நிதியிலிருந்து சுமார் 12,000 கோடியும், வெளி நிறுவனங்களிடம் 6,000 கோடியும் கடன் வாங்கி, 18,000 கோடி செலவில், பூந்தமல்லி-வடபழனி மெட்ரோ பணிகளைத்துரிதப்படுத்திட முடித்தது.

ஒன்றிய அரசிடம் பணத்தைக் கேட்கும்போது நிர்மலா சீதாராமன், ``இது மாநில அரசின் திட்டம். இதற்கு நாங்கள் எதற்குப் பணம் தர வேண்டும்?" என்று ஆணவத்துடன் பதில் சொன்னார். ஆனால், மோடி தமிழ்நாட்டு வளர்ச்சிக்காக இந்த மெட்ரோவை அர்ப்பணித்ததாக பா.ஜ.க. மற்றும் த.வெ.க. இரண்டு கட்சிகளும் சென்னை முழுவதும் போஸ்டர் ஒட்டியுள்ளனர். சென்னை மெட்ரோவின் வரலாற்றை, தி.மு.க.வின் பெயரை மறைத்துவிட்டு, யாராலும் எழுத முடியாது" என்று குறிப்பிட்டுள்ளார்.

ஃப்ளாஷ்பேக்



பெருமைப்படுத்திய பேராசிரியர்!




சி.இறைவன்

2010-ஆம் ஆண்டு, தஞ்சாவூரில் மாமன்னன் ராஜராஜ சோழன் கட்டிய பெரிய கோயில் 1000 ஆவது ஆண்டு விழா, தமிழ்நாடு அரசு விழாவாக நான்கு நாட்கள், அன்றைய முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. அப்போது, தஞ்சை சுற்றுலா மாளிகையில் தங்கி இருந்த பொதுச்செயலாளர் பேராசிரியர் அவர்களைச் சந்தித்து உரையாட வாய்ப்பு கிடைத்தது. அது சமயம், கழகப் பணியில் 50 ஆண்டுகள் நிறைவு பெற்றதை அறிந்து, பேராசிரியர் எனக்கு சால்வை அணிவித்து, என்னை வாழ்த்திப் பெருமைப்படுத்தினார். அப்போது, என் மகள் இறை.கார்குழலி உடனிருக்கிறார்.

- சி.இறைவன், கழகச் சட்டத்திட்டத் திருத்தக்குழு, தஞ்சாவூர்.

இதுபோன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள்.
அலைபேசி எண் அவசியம். அனுப்பவேண்டிய முகவரி: அன்பகம், 614,
அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018
வாட்ஸ்அப் எண்: 82204-51520 மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

கல்லில் செதுக்கப்பட்டு, கண்பார்வையில் வைக்க வேண்டும்!



78

கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுபூர்வமாக விவரிக்கும் தொடர்!

தி.மு.க. அமைச்சர்கள், வாரியத் தலைவர்கள் உள்ளிட்டோர்மீது, ஊழல் குற்றச்சாட்டுகளைப் பட்டியல் போட்டு, டெல்லி வரை சென்று கொடுத்த எம்.ஜி.ஆர்., சர்க்காரியா ஆணையத்தின் குறுக்கு விசாரணையின்போது, 'எனக்கு எதுவும் தெரியாது, என்னிடம் எந்த ஆதாரமும் இல்லை!' என பல்டி அடித்தார்.

எம்.ஜி.ஆர். கொடுத்த புகார்களுக்கு, கலைஞர் பதிலை அளித்து, அது புத்தகமாகவும் அச்சடித்து சட்டப் பேரவைக்கு அளித்திருந்தார் அல்லவா... அந்தப் பதில்களில் கலைஞர் சொன்னதுதான், சர்க்காரியா விசாரணையின்போதும் கண்டறியப்பட்டது.

குறிப்பாக, ஜனாதிபதியிடம் கொடுத்த புகார் பட்டியல் மட்டுமல்லாது, தனிப்பட்ட அமைச்சர்கள் மீதும் எம்.ஜி.ஆர். குற்றச்சாட்டுகளைக் குவித்திருந்தார். அதுகுறித்து, கழக ஆட்சியின்போதே சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவரைக்கொண்டு கலைஞர் அமைத்த ஆணையத்தை அ.தி.மு.க.வினர் புறக்கணித்ததுடன், 'வேறு மாநில நீதிபதி ஒருவரைக் கொண்டுதான் அந்த விசாரணை நடைபெற வேண்டும்' என ஆவேசமாக அவையில் பதிவுசெய்துள்ளனர். ஆனால், கழக ஆட்சியைக் கலைத்துவிட்டு, அரசியல் பழிவாங்கலாக சர்க்காரியா கமிஷன் அமைக்கப்பட்டபோது, அங்கு 'எங்களுக்கு எதுவும் தெரியாது' எனக் கைவிரித்துவிட்டனர்.

தவிர, எம்.ஜி.ஆர். கொடுத்த புகார் பட்டியலில் இடம்பெற்றிருந்தவர்கள், சர்க்காரியா கமிஷன் அமைத்த நேரத்தில், ஒருவர் பின் ஒருவராக எம்.ஜி.ஆர். அவர்களுடன் இணைந்துவிட்டனர். சத்தியவாணி முத்து, மதுரை முத்து, நாவலர் ஆகியோரின் பெயர்கள் பட்டியலில் இருந்தும்கூட அவர்களை விசாரிப்பதை, சர்க்காரியா கமிஷன் தவிர்த்துவிட்டது. வினோதம் என்னவென்றால், அவர்கள்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளைக் கழகம்தான் மறுத்துவந்தது. அதாவது, குற்றச்சாட்டுகள் அப்படியே இருந்தன. குற்றம் சாட்டப்பட்டவர்களில் பெரும்பான்மையோர், எம்.ஜி.ஆர். பக்கம் இணைந்தனர்.

இறுதியாக, சர்க்காரியா கமிஷன் முழு அறிக்கையும் வெளிவந்து, அதனை ஒன்றிய அரசு, மாநில அரசுக்கும் அனுப்பிவைத்தது. 'அந்த அறிக்கையைச் சட்டமன்றத்தில் வையுங்கள்; அதற்கு நான் பதிலளிக்கிறேன்' என கலைஞர் பகிரங்க சவால் விடுத்தபோதும், அதற்குப் பதில் சொல்லாமல்தான் சட்டமன்றத்தில் அமர்ந்திருந்தார் எம்.ஜி.ஆர்.

சர்க்காரியா அறிக்கை அடிப்படையில், கலைஞர் மீதும் கழகத்தினர் மீதும் கிரிமினல் வழக்குகளைப் போடும் பணிகள் தொடங்கின. அவற்றையெல்லாம் எதிர்கொள்வதற்காக, சென்னையில் தனியாகக் கழகத்தின் சார்பில், தனி அலுவலகத்தையே அமைத்தார் கலைஞர்.

அறிக்கையின் அடிப்படையில், மத்திய புலனாய்வுத் துறை (CBI) விசாரணை மேற்கொண்டது. 1977-ஆம் ஆண்டு, சிறப்பு நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டன. அவற்றில் குறிப்பிடத்தக்கது, கோதுமை கொள்முதல் வழக்கு. பஞ்சாபிலிருந்து கோதுமை வாங்கியதில், சில நிறுவனங்களுக்குச் சாதகமாக உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டதாகவும், அதன்மூலம் கலைஞர் ஆதாயம் பெற்றார் என்றும், சர்க்கரை ஒதுக்கீட்டில் முறைகேடு நடந்ததாகவும் ஒரு வழக்கு. தவிர, வான்வழியாக மருந்து தெளித்தல் தொடர்பான குற்றச்சாட்டு. இதுகுறித்து நீதிமன்றம் சென்றபோது, அந்த முறையீடுகளை எல்லாம் உயர் நீதிமன்றம் ஏற்கவில்லை. உயர் நீதிமன்றத்தில் நிவாரணம் கிடைக்காததைத் தொடர்ந்து, உச்ச நீதிமன்றத்தை அணுகினார். அங்கும் அவரது மேல்முறையீடுகள் தள்ளுபடி செய்யப்பட்டன.

1979-ஆம் ஆண்டில், முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி மீது, ஜனதா கட்சி விசாரணை ஆணையத்தை அமைத்தது. அது தொடர்பாகப் பேசிய இந்திரா காந்தி, ஜனதா அரசு தன்னைப் பழிவாங்க வேண்டுமென்ற எண்ணத்துடன் விசாரணைக் கமிஷன்களை அமைத்துள்ளது என்றார். அப்படியானால், 'தமிழ்நாட்டில் கலைஞர் தலைமையில் பதவியில் இருந்த தி.மு.க. ஆட்சியைக் கலைத்துவிட்டு, சர்க்காரியா கமிஷன் அமைத்தீர்களே, அதுவும் அரசியல் நோக்கத்துக்காகத்தானா?' என்ற கேள்வி எழுந்தவுடன், இந்திரா காந்தி அவர்களுக்கு மிகவும் கோபம் ஏற்பட்டுவிட்டதாம்.

அப்போது, இதைக் குறிப்பிட்டு உடன்பிறப்புகளுக்குக் கடிதம் எழுதிய கலைஞர், "1972-இல் தி.மு.க. ஆட்சிமீது கொடுக்கப்பட்ட புகாரைத் தூக்கி கூடையில் போட்டுவிட்டு, அதில் எதுவுமில்லையென்று தள்ளிவிட்ட நீங்கள், நெருக்கடிச் சட்டத்தை தி.மு.க. எதிர்த்த ஒரே காரணத்திற்காகத் தானே - 1976-இல் (நாலு வருடம் கழித்து) அந்தப் புகாரைத் தட்டியெடுத்து சர்க்காரியா கமிஷன் போட்டீர்கள்? அரசியல் நோக்கத்துடன்தான் அந்தக் கமிஷன் போடப்பட்டது என்று இன்றைக்கு மத்திய அமைச்சர்களாக இருப்பவர்கள், அன்றைய தினம் நாடாளுமன்றத் தேர்தலின் போது பல கூட்டங்களில் பேசினார்களே - அப்போதாவது உங்கள் அரசியல் நோக்கம் குறித்து சிந்தித்துப் பார்த்தீர்களா?

உடன்பிறப்பே! இப்படியெல்லாம் நிருபர்கள் தொடர்ந்து கேட்டிருக்க முடியும். என் செய்வது! அம்மையார்தான் முதல் கேள்வி புறப்பட்டவுடனே, முகம் சிவக்கத் தனது கோபத்தைக் காட்டிவிட்டார்களே!

எப்படியோ ஒன்று! விசாரணைக் கமிஷன்கள் எல்லாம் அரசியல் நோக்கத்துடன் அமைக்கப்பட்டவையாகும் என்று இந்திரா அம்மையார் கூறியுள்ள கருத்து, கல்லில் செதுக்கப்பட்டு, அம்மையாரது கண்பார்வையிலே அடிக்கடி படுமாறு வைக்கப்பட வேண்டிய சிறந்த கருத்தாகும்" என்று எழுதியுள்ளார்.

1981-ஆம் ஆண்டு, மாநிலங்களவையில் நடைபெற்ற ஒரு விவாதத்தில், சர்க்காரியா ஆணையத்தின் அடிப்படையில் தொடரப்பட்ட வழக்குகள், பின்னர் கைவிடப்பட்டதாகப் பேசப்பட்டது. உண்மையில், சி.பி.ஐ. தரப்பால் நீதிமன்றத்தில் குற்றச்சாட்டுகளை நிரூபிப்பதற்கான வலுவான சாட்சியங்களையோ, ஆவணங்களையோ சமர்ப்பிக்க முடியவில்லை. அதனால், சிறப்பு நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்த வழக்குகள் அனைத்தும் ஒன்றன்பின் ஒன்றாகத் தள்ளுபடிசெய்யப்பட்டு, கைவிடப்பட்டன.

அதன்பின்னர், 1984-ஆம் ஆண்டு அ.தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணி அமைந்த போதும் இந்த வழக்குகளை உயிர்ப்பிக்க, எம்.ஜி.ஆரால் முடியவில்லை. அதன்பின்னர், புகார் கூறியவர்கள் தமிழ்நாட்டின் ஆட்சி அதிகாரத்தில் இருந்தாலும், அந்தத் தோல்வியை ஒப்புக்கொள்ள முடியாமல் திணறுகின்றனர். ஆனால், 50 ஆண்டுகளைக் கடந்தும் அரசியல் களத்தில் அந்த அவதூறுகள் சர்க்காரியா ஆணையத்தின் பெயரால் நிலைத்துவிட்டன. அந்த அவதூறுகளைத்தான் ஆதாரமாக இன்றும் காட்டிக்கொண்டிருக்கின்றனர், சில மங்குனிகள்.

...தொடரும்

● தமிழ்.கா.அமுதரசன் ●

தெரிந்து கொள்வோம்

07.08.1954

`நாஞ்சில் நாடு' தமிழருக்கே!

கன்னியாகுமரியைத் தமிழ்நாட்டுடன் இணைக்கக் கோரி, 07.08.1954-இல் செங்கோட்டை, நாகர்கோவில் நீதிமன்றங்கள் முன்பு, தி.மு.கழகம் அறப்போரில் ஈடுபட்டது. அறப்போரில் ஈடுபட்ட 110 பேர் கைதுசெய்யப்பட்டனர். அவர்களில் 20 பேர் மீது வழக்குத் தொடரப்பட்டு, சிறையிலடைக்கப்பட்டனர்.



Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900